

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (18.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், அதிமுகவின் நாளிதழான நமது எம்.ஜி.ஆர் மற்றும் நமது அம்மா பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியர் மருது அழகுராஜ் அ.தி.மு.க.வில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தார். இந்நிகழ்வின்போது, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, கழக தலைமை நிலைய அலுவலகச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில துணைச் செயலாளர் கா. ரபி அகமது தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் துறைமுகம் காஜா உள்ளார்.

### வீரமங்கை ராணி வேலு நாச்சியார் புகழைப் போற்றுகின்ற –பறைசாற்றுகின்ற வகையில்

# சென்னையில் சிலை நிறுவி சிறப்புச் சேர்த்த முதல்வருக்கு நன்றி!

## சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ராணி டி.எஸ்.கே.மதுராந்தகி நாச்சியார் அறிக்கை!

**சென்னை, செப். 20 -**

**“வீரமங்கை ராணி வேலு நாச்சியார் புகழைப் போற்றுகின்ற வகையிலும் பறை சாற்றுகின்ற வகையிலும், அவருக்கு சென்னை - கிண்டியில் திருவுருவச் சிலை நிறுவி, சிறப்பான நடவடிக்கை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிவகங்கை சமஸ்தானம் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ராணி டி.எஸ்.கே.மதுராந்தகி நாச்சியார், முதல்வ ருக்கு எழுதியுள்ள வாழ்த்து மடலில் குறிப்பிட்டுள்ளார்.**

அவர், முதல்வர் அவர்களுக்கு அனுப்பிய மடல் வருமாறு:

**முதலமைச்சர் அவர்களுக்கு. வணக்கம்,**



தமிழகத்தில் சிறப்பான ஆட்சியினைநடத்திவரும் முதலமைச்சர் அவர்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழர்களின் அளப்பறியாப் பங்கு குறித்தும், வீரர்களின் தியாகம் குறித்தும், போராட்டங்கள் குறித்தும், தாய் மொழியான தமிழ்மொழி குறித்தும், வீரம், காலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளில் பங்குபெற்ற முன்னோர்களை கௌரவிக்கும் பொருட்டும். இதனை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தமிழகம் முழுவதும் மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் இந்திய வரலாற்றில் முதல் பெண்மணியாக சுதந்தி ரத்திற்காக தனித்து நின்று போராடிய வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் புகழை போற்றுகின்ற வகையில் சிவகங்கை மாவட்டத்தில் இவ் வீரப் பெண்மணிக்கு நினைவு மண்டபம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப் பட்டு, சிறப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும், வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் புகழை பறைசாற்றுகின்ற வகையில் தற்போது சென்னை, காந்தி மண்டபத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப் பட்டுள்ள வீரமங்கை ராணி வேலு நாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் (19.09.2025) திறந்து வைத்து சிறப்பித்துள்ளார்கள்.

வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் புகழை போற்றுகின்ற வகையிலும், பறைசாற்றுகின்ற வகையிலும், சிறப்பான நடவடிக்கை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிவகங்கை சமஸ்தானம் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அம்மடலில் குறிப்பிட்டுள்ளார்.

### இசைஞானி இளையராஜாவுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தி

# அனைவர் மத்தியிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உயர்ந்து நிற்கிறார்!

## ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் பாராட்டு!

**சென்னை, செப். 20 -**

**இசைஞானி இளையராஜாவுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தி அனைவரது மத்தியிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார் என 'தி இந்து' ஆங்கில நாளிதழ் பாராட்டு தெரிவித்துள்ளது.**

'தி இந்து' ஆங்கில நாளிதழில் இசைஞானி இளையராஜாவுக்கு தமிழ்நாடு அரசு பாராட்டு விழா நடத்தியது குறித்து செய்தியாளர் கோலப்பன் சிறப்புக் கட்டுரை எழுதியுள்ளார்.





Hitting all the right notes

Chief Minister M.K. Stalin steals BJP's thunder in felicitation of maestro Ilaiyaraaja

திரைத்துறையில் இசைஞானி இளையராஜாவின் 50 ஆண்டுகால அளப்பரிய பணியை கௌரவிக்கவும், லண்டனில் சிம்பொனி இசை நிகழ்ச்சி நடத்தி உலகரங்கில் தமிழர்களை பெருமைப்படுத்தியதைப் பாராட்டியும், தமிழ்நாடு அரசு சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரமாண்டமாக பாராட்டு விழா நடத்தியதாக பெருமையுடன் கூறியுள்ளார்.

தமிழரின் அடையாளமாக திகழும் இளையராஜா, பா.ஜ.க. ஆதரவாளர், பிரதமர் மோடியை பின்பற்றுபவர். தான் சார்ந்த மதத்தின் மீது மிகுந்த பக்தி கொண்டவர் என்றாலும் இளையராஜாவின் புகழை, அவர் சார்ந்திருக்கும் பா.ஜ.க. கட்சியே மக்கள் மன்றத்தில் போற்றி புகழவில்லை என 'தி இந்து' ஆங்கில நாளிதழ் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இசைஞானியை மக்கள் மன்றத்தில் வைத்து பாராட்டு விழா நடத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளையராஜாவுக்கு ‘பாரத ரத்னா’ விருது வழங்க வேண்டும் என, ஒன்றிய பா.ஜ.க. அரசால் புறந்தள்ள முடியாத கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தமிழ்நாடு அரசு நடத்திய பாராட்டு விழா தன்னை மிகுந்த நெகிழ்ச்சியில் ஆழ்த்தியதாக இளையராஜாவும் மகிழ்ச்சியுடன் கூறினார். சங்க இலக்கியப் பாடல்களுக்கு இசையமைக்க இருப்பதாகவும் முதலமைச்சர் கோரிக்கையை ஏற்று இளையராஜா அறிவித்துள்ளார்.

தமிழ், தமிழரின் பெருமை இளையராஜா என்பதை முதலமைச்சர் நன்கு அறிந்தவர் என ‘தி இந்து’ நாளிதழ் பாராட்டியுள்ளது.

இடதுசாரிச் சித்தாந்தங்களுடன் செயல்பட்ட எழுத்தாளர் ஜெயகாந்தனை, கலைஞர் ஈர்த்ததைப் போல், இளையராஜாவையும் முதலமைச்சர் கவர்ந்துள்ளார். “மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு” என்ற பேரறிஞர் அண்ணா கூறிய உவமையைச் சுட்டிக்காட்டியுள்ள ‘தி இந்து’ நாளிதழ், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் செயல்பாடுகள் இருப்பதாக புகழாரம் சூட்டியுள்ளது.

### தமிழ்நாட்டின் உள் கட்டமைப்பு சிறப்பாக உள்ளது

# கடல்வழி வணிகத்தை ஊக்குவிப்பது தலையாய கடமை!

## நீலப் பொருளாதார மாநாட்டில் – அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, செப். 20 - கடல்வழி வணிகத்தை ஊக்குவிக்க வேண்டியது தலையாய கடமை- என்று சென்னையில் நடைபெறுகின்ற நீலப் பொருளாதார மாநாடு -2025ஐ தொடங்கி வைத்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

சென்னையில் தியாகராய நகர் ஹோட்டல் ரெசிடென்சியில் நேற்று முன்தினம் (18.09.2025) நீலப் பொருளாதார மாநாடு-2025ஐ (Blue Economy Submit 2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்து உரையாற்றினார்.

நீலப் பொருளாதார மாநாடு என்று சொல்வதைவிட, இதனை நீலப் பொருளாதார கருத்தரங்கம் என்று சொல்வதே பொருத்தமானதாக இருக்கும் என்று தெரிவித்து, உரையை தொடங்கிய அமைச்சர், முதலமைச்சர், 1 டிரில்லி யன் டாலர் அளவிற்கு தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த நீலப் பொருளாதாரத்தின் பங்கினை மேம்படுத்த இந்த மாநாட்டில் பங்குப்பெறும் அனைத்து வல்லுநர்களும் அனுபவமிக்க கருத்துகளை இந்த மாநாடு மூலமாக தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டின் கடற்கரை பிற மாநில கடற்கரைகள் போல் அல்லாமல், வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் பகுதிகளைக் கொண்ட ஒரு தீபகற்ப கடற்கரை பகுதியாகும். பன்னாட்டுக் கப்பல்கள் செல்லும் வழித்தடத்திற்கு மிக அருகாமையில் கடற்கரை கொண்ட பகுதியாகும். மேலும், தெற்கே நெருங்கிய உறவுகள் கொண்ட அண்டை நாடாக இலங்கை உள்ளது.

14 கடலோர மாவட்டங்கள் கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியைப் பயன்படுத்துவோர் பல்வேறு தரப்பினர். குறிப்பாக தங்கள் வாழ்வாதாரத்திற்கு கடற்கரை பகுதியிலேயே குடியிருந்து மீன்பிடித் தொழில் செய்து வரும் மீனவர்கள், மீன்பிடி துறைமுகங்கள், மீன்வளர்ப்புப் பண்ணைகள், வணிக ரீதியாக ஒன்றிய மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள துறைமுகங்கள், மக்கள் பொழுதுபோக்கு கடற்கரை பகுதிகள் (Beaches) சுற்றுச்சூழல் பாதுகாப்பு பகுதிகளான அலையாத்தி காடுகள், ஆமைகள் முட்டையி டும் பகுதிகள், மன்னார் வளைகுடா பவளப் பாறைகள் நிறைந்த பகுதிகள், பறவைகள் சரணாலயங்கள், வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்த கோவில்கள் (திருச்செந்தூர், இராமேஸ்வரம்), தேவாலயங்கள் (வேளாங்கண்ணி, மணப்பாடு), இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் (நாகூர்), கடலோர தொழில் பூங்காக்கள், கலங்கரை விளக்கங் கள் என்று எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு மிகப்பழமையான கடல்சார் வரலாற்றை கொண்டது. பண்டைய தமிழ் மன்னர்கள் கடல்கடந்து வாணிபம் செய்ததோடு, சக்திவாய்ந்த கப்பல்படைகொண்டு, தெற்காசிய நாடுகள் சுமத்ரா, ஜாவா வரை கைப்பற்றி தங்கள் சாம்ராஜ்யத்தை நிலைநாட்டியுள்ளனர். கப்பல் கட்டுதலில் மிகச்சிறந்த தொழில்நுட்பங்கள் பழங்காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. பண்டைய தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து தென்கிழக்கு ஆசியா, இலங்கை, ரோம், கிரேக்க நாடுகளுடன் வாணிபம் நடைபெற்று வந்துள்ளது என்று தெரிவித்த அமைச்சர் ,

உலகளவில், சுமார் 80% சதவீத வணிகமும், மிகநீண்ட சுமார் 11000 கிலோ மீட்டர் நீள கடற்கரைப் பகுதியைக் கொண்ட நம் நாட்டில் சுமார் 95% சதவீத வணிகம் கடல்வழியாக நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்ட வேண்டும் என்ற இலக்கோடு பயணித்துக் கொண்டிருக்கும் நமக்கு இந்த நீலப் பொருளாதாரம் அதாவது கடல்வழி வணிகத்தை மேலும் ஊக்குவிக்க வேண்டியது நம் தலையாயக் கடமை. அதற்கு வணிகத்துறைமுகங்கள், மீன்பிடித் துறைமுகங்கள், கடல்சார் சுற்றுலா மேம்பாடு, கப்பல் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல், ஆகிய துறைகளில் நாம் மேலும் முன்னேற்றமடைய திட்டங்களை வகுக்கவேண்டும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் டாலர் அளவுக்கு கொண்டு செல்ல ஒவ்வொரு நாளும், முதலமைச்சர் - திராவிட மாடல் அரசை வழிநடத்திக் கொண்டிருக்கும் தளபதி மு.க.ஸ்டாலின் , பல்வேறு திட்டங்களை வடிவமைத்து கொண்டிருக்கிறார் என்றும்;

2024-25ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் ஒட்டு மொத்த GDP சுமார் 6-7 சதவீதம் இருக்கும்போது, தமிழ்நாட்டின் GDP இந்தியாவிலேயே முதல் மாநிலமாக இரட்டை இலக்கத்தில் அதாவது 11.2% சதவீதம் வளர்ச்சியினை எட்டியுள்ளது. இதற்கான முக்கிய காரணங்கள் தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாடுகள், மனிதவள திறன் மேம்பாடு, அதிக வாகன உற்பத்தி நிறுவனங்கள் (இந்தியாவின் டெட்ராய்ட்- மோட்டார் நகரம்), ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள், மின்னணு சாதன உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் எளிதில் தொழில் துவங்க உகந்த மாநிலமாக உள்ளது ஆகியவனவாகும் என்று தெரிவித்தார்.

கடல்மார்க்கமாக கப்பல்கள் மூலம் கொண்டு செல்லும் சரக்கு வணிகத்தில், சாலை மற்றும் இரயில் மூலமாக கொண்டு செல்லும் கட்டணத்தைவிட மிகக் குறைவானதாகும். மேலும், சுற்றுப்புறச் சூழல் மாசின்றி சரக்குகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்ல இயலும். மேலும், சென்னை - கன்னியாகுமரி சாலையும், கிழக்கு கடற்கரை சாலையும் நம் கடலோர வணிக துறைமுகங்கள் மற்றும் மீன்பிடி துறைமுகங்களுக்கு எளிதான சாலை இணைப்பினை வழங்குகிறது. மேலும் தமிழ்நாட்டில் கடற்கரை பகுதிகளுக்கு இரயில் இணைப்பும் போதிய அளவில் உள்ளது. இந்த துறைமுக மேம்பாட்டாளர்கள் கருத்தில் கொண்டு துறைமுகங்களை அமைக்கவும், தொழில் துவங்கவும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இத்தகையப் பெருமை வாய்ந்த தமிழ்நாட்டில், நீலப் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிக்க இத்துறை சார்ந்த வல்லுநர்கள், அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கருத்து பரிமாற்றம் ஆக்கப்பூர்வமாக அமைய வாழ்த்துகளை தெரிவித்தார்.

துறைமுக மேம்பாட்டாளர்கள், கப்பல் கட்டுதல் மற்றும் பழுதுபார்ப்புத் தொழில் வல்லுநர்கள், மீன்வளம் மற்றும் சுற்றுலாத்துறைகளின் நிபுணர்களின் அனுபவமிக்க கருத்துக்களை தெரிவிக்க வந்துள்ள அனைத்து விருந்தினர் களுக்கும், புகழ்பெற்ற பேச்சாளர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நீலப் பொருளாதார மாநாட்டில், சென்னை மற்றும் காமராஜர் துறைமுக ஆணையத்தின் தலைவர் சுனில் பாலிவால், IAS., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ் IAS., தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர் / துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், IAS., இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில துணைத் தலைவர் சி.தேவராஜன் மற்றும் துறைமுக மேம்பாட்டாளர்கள், துறைமுக நிர்வாகிகள், துறைமுக பயனீட்டாளர்கள், கடல்சார் சுற்றுலா சார்ந்த செயல்பாட்டாளர்கள், மீன்வள மற்றும் மீன் வளர்ப்புத் துறை சார்ந்த வல்லுனர்கள், கப்பல் கட்டுதல், பழுதுபார்த்தல் துறை வல்லுநர்கள், இந்த மாநாட்டு கருத்தரங்கிற்கு வந்திருக்கும், பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்கள், கடல்சார் வாரிய அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களை தி.மு.க.வின் உயரிய விருதான தந்தை பெரியார் விருது பெற்ற கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு ஊராட்சி ஒன்றியம் பூட்டு தாக்கு மேல்நிலைப் பள்ளி எதிரில் தூய்மை பாரதம் இயக்கம் என்ற (ஊரகம்) திட்டத்தின் கீழ் ”தூய்மையே சேவை ”2020 – 25 விழிப்புணர்வு பேரணியை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டக் கழக செயலாளர் ஆர்.காந்தி, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல்.ஈஸ்வரப்பன், ஒன்றிய குழு தலைவர் புவனேஸ்வரி சத்தியநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.